


சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (20.12.2025) சுற்றுலா துறை மற்றும் இந்து குழுமம் இணைந்து தயாரித்த Fairs & Festivals என்ற புத்தகத்தினை சென்னை, நுங்கம்பாக்கம் தாஜ் கோரமண்டல் ஓட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிட்டார்கள். இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, காட்டுமன்னார் கோவில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், இந்து குழும முதன்மை செயல் அலுவலர் எல். வி. நவனிநீத், எழுத்தாளர் ஆ.கோபண்ணா, சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர்.சுப.வீரபாண்டியன், மாநிலத் தலைவர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கம் மதுக்கூர் ராமலிங்கம், சுற்றுலாத்துறை இணை இயக்குனர் திருமதி.அ. சிவப்பிரியா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி சி. லட்சுமி பிரியா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எம்.ஜி.ஆரையும் விஜயையும் ஒப்பிட முடியாது - பா.ஜ.க.வின் 'சீ' டீம்தான் விஜய்!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை.டிச22

புதுக்கோட்டை மாவட்டம் வடவாளத்தில் மருத்து முகாமை தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். அப்போது செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்:

எஸ் ஐ ஆர் பணியில் 97 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 39,587 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

பத்து நாட்களுக்குள் வாக்காளர் பட்டியலை சரி பார்த்து உண்மையிலே வாக்காளர்கள் நீக்கப்பட்டு இருக்கிறார்களா வேண்டுமென்றே விட்டிருக்கிறார்களா நிச்சயமாக கண்டுபிடித்து சொல்கின்றோம். நகர் பகுதிகளில் இன்னும் அதிகமாக இருக்கிறது. கிராமப்புறங்களில் இறந்தவர்களை தவிர மற்ற நீக்கப்பட்ட வாக்காளர்களை சரி பார்க்க வேண்டிய நிலை இருக்கிறது. எங்களுடைய பி.எல்.ஏ., பி.எல்.ஏ2, பி.எல்.சி. இணைந்து ஒவ்வொரு வாக்குச்சாவடி மையத்திற்கும் சென்று அங்குள்ள வாக்காளர் பட்டியலை பத்து நாட்களுக்குள் சரி பார்த்து விடு வார்கள். அதற்குப் பிறகு இது குறித்து நாங்கள் கருத்து



தெரிவிக்கின்றோம்.

பா.ஜ.க., அ.தி.மு.க. ஆகியோர் எதுவாக இருந்தாலும் சரி என்று தான் கூறுவார்கள்.

நாங்கள் தீய சக்தியும் இல்லை தூய சக்தி உள்ளிட்ட எதைப்பற்றியும் கவலைப்பட மாட்டோம் எங்களிடம் இருப்பது மக்கள் சக்தி. விஜய்க்கு மக்கள் சக்தியைப் பற்றி தெரியாது. சினிமா வசனமாக தீய சக்தி தூய சக்தி என்று கூறுகிறார். மக்கள் சக்தி எங்களிடம் இருக்கிறது. விஜய்க்கு சிலப்பதிகாரமும் தெரியாது ஒன்றும் தெரியாது. எழுதிக் கொடுத்தவர்களுக்கு தான் தெரியும். அவரிடம் தான் கேட்க வேண்டும் நாம்.

பெரியாரைக் கொள்கை தலைவராக விஜய் ஏற்றுக்கொண்டபோது திராவிடத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றுதான் அர்த்தம்.

பா.ஜ.க.வின் சி டீமாக இருக்க கூடிய விஜய் அதை மறைக்கலாம். ஒன்று மட்டும் உண்மை அவரை பொறுத்தவரை எந்த காலத்திலும் அவர் நினைப்பது நடக்காது. ஆறு மாதம் நடித்துவிட்டு முதலமைச்சராவது எல்லாம் சினிமாவில் நடக்கும் அரசியலில் உண்மையில் நடக்காது.

எம்ஜிஆர் 1972ல் கட்சி ஆரம்பித்தார். திண்டுக்கல் இடைத்தேர்தல் வெற்றி பெற்ற உடன் தான் அவர் கட்சி உறுதியானது.

அதேபோல் விக்கிரவாண்டி உள்ளிட்ட இடைத்தேர்தலில் விஜய் நின்று அவர் பலத்தை காட்டி இருந்தால் இன்று பேசுவதற்கு யோகிதை இருக்கிறது. ஆனால் விஜய் அந்த தேர்தலில் புற முதுகிட்டு ஓடிவிட்டார். தேர்தலை கண்டு கொள்ள வில்லை.

எம்.ஜி.ஆரையும் விஜயையும் ஒப்பிட முடியாது. விஜய் எந்த காலத்திலும் எம்.ஜி.ஆராக முடியாது.

சினிமா பாணியில் விஜய் பேசி வருகிறார். விஜய் நூறு பேரை சினிமாவில் அடிப்பார். அதே போல்தான் தரம் தாழ்ந்து பேசுகிறார். அவரைப் போல் நாங்கள் இல்லை. பா.ஜ.க.வின் சீடீம் தான் விஜய்.

கூட்டணியை மட்டும் தான் நம்பியிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. அப்படி இருக்கையில் அவருக்கு கொள்கை வேறு கூட்டணி வேறு என்று சொல்ல தகுதி கிடையாது. கொள்கையை விட்டு விட்டு தான் பா.ஜ.க.வின் அடிமையாக அவர் இருக்கிறார்.

அ.தி.மு.க. கட்சிக்காரர்கள் பாவம் அவர்கள் துடிக்கிறார்கள் தி.மு.க.வை மறைமுகமாக ஆதரித்தால் தான் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கும். தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு இன்னும் பலம் கிடைக்கும் என்ற எண்ணம் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு இருக்கிறது.

பெரிய தலைவர் தான் அவர். பிக் பாஸ் தலைவர் தான் நயினார் நாகேந்திரன் என்பதிலும் நிலையாக அதிமுக இருக்க மாட்டார்கள் நாடாளுமன்றத்தில் வாக்களித்துவிட்டு வெளியே வந்து வேறு ஒன்றை பேசுவார்கள் அதே போல் தான் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்திலும் அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் தம்பிதுரை செயல்பட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

### மகாத்மா காந்தி பெயரை நீக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# திருச்சி வடக்கு - மத்திய மாவட்டத்தில் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் க,வைரமணி – ந,தியாகராஜன் எம்,எல்,ஏ, அறிக்கை!

திருச்சி, டிச. 22-

திருச்சி மத்திய மாவட்ட திமுக செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்





புச் சட்டத்தை சிதைத்து அதன் திட்டப் பணிகளை சீர்குலைத்து நிதி ஒதுக்கீட்டை குறைப்பது. மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது வேலைநாட்களை குறைப்பது. பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு என்று சொன்ன அண்ணல் காந்தியடிகளின் பெயரை இத்திட்டத்தில் இருந்து நீக்குவது, நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கத் துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசின் நாசகார சதிச் செயலையும் அதற்கு ஆதரவுதரும் அ.தி.மு.க.வை கண்டித்தும், அச்சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தியும் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகதுறை அமைச்சருமான கே.என். நேரு வழிகாட்டுதலின் படி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் 24.12.2025 புதன்கிழமை காலை: 10.00 மணியளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற இருக்கிறது.

இந்த ஆர்பாட்டத்தில் தி.மு.க மற்றும் தோழமை கட்சிகளின் மாவட்ட, அனைத்து ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைசெயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொண்டு வெற்றி பெற செய்ய வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.




ஓசூர் மாநகர தி.மு.க. சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் ரத்ததான முகாம். ஓசூர் மாநகர மேயர் சத்யா தலைமையில் நடைபெற்ற ரத்ததான முகாமில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் ரத்ததான முகாமை தொடங்கி வைத்து ரத்த தானம் கொடுத்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் யுவராஜ், சீனிவாசன், மாதேஸ்வரன், எல்லோரா மணி, துணை மேயர் ஆனந்த்ய்யா , கோபாலகிருஷ்ணன், வெங்கடேஷ், ராமு , ராஜா , கஜேந்திர மூர்த்தி, கண்ணன், மற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முகாமில் கலந்து கொண்டு ரத்த தானம் வழங்கினார்கள்.



கிருஷ்ணகிரியில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார். மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கிரி தலைமையில் நடைபெற்ற விழாவில் அவைத்தலைவர் நாகராஜ், கர்நாடகா மாநில அமைப்பாளர் ராமசாமி, மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அன்பரசு, மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர் நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, ஒன்றிய செயலாளர் தேங்காய். சுப்பிரமணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் சங்கர், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ஹனீபாவின் நூற்றாண்டைக் கொண்டாடும் முதலமைச்சர்!



1977இல் நடந்த சட்டமன்றத் தேர்தலின்போது எனக்கு வயது 12. எங்களுடைய ஊருக்குத் தேர்தல் பிரச்சாரம் செய்வதற்காக மாலை வேளையில் ஒரு அம்பாசிடர் கார் வந்தது. காருக்குள் இருந்தவர் துண்டுப் பிரசுரங்களை அள்ளி வீசிக்கொண்டேபோனார். துண்டுப் பிரசுங்களைப் பொறுக்குவதற்காகத் தெருப் பிள்ளைகள் எல்லாம் காரைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். அப்படி ஓடிய சிறுவர்களில் நானும் ஒருவன். யார் அதிகத் துண்டுப் பிரசுரங்களைப் பொறுக்கிச் சேர்க்கிறார்கள் என்பதில் சிறுவர்களான எங்களுக்குள் ஒரு போட்டி. அதனால், காரைப் பின் தொடர்ந்து தெருத்தெருவாக ஓடிக்கொண்டிருந்தோம். அப்படி ஓடிக்கொண்டிருக்கும்போது காரில் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கியில், 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என்ற பாடலைப் போட்டார்கள். அந்தக் கணத்தில்தான் கலைஞர் எனக்குள் வந்தார். தி.மு.க. எனக்குள் வந்தது.

'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே', 'அண்ணா அழைக்கின்றார்', 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததடா' போன்ற பாடல்கள், சினிமாப் பாடல்களைப் போன்றில்லாமல் வேறாக இருந்தன. பாடிய குரலும் வேறாக இருந்தது. 12 வயதில் கேட்ட அந்தப் பாடல்களை இன்றும் கேட்கிறேன். பாடல் வரிகளும் பாடிய குரலும் எனக்குள் அப்படியேதான் இருக்கின்றன. எத்தனை முறை கேட்டாலும் சலிப்பு ஏற்பட்டதில்லை. ஏற்படாது. யார் எழுதிய வரிகள், யார் பாடியது, எதற்காகப் பாடியது என்பது எதுவும் எனக்கு அப்போது தெரியாது.

ஆனால், பாடல் வரிகளும், பாடிய குரலும் என் இரத்தத்தோடு கலந்துவிட்டது. சினிமாப் பாடல்களைப் பாடும் குரல்கள் போன்று இல்லை, கிராமத்துக் குரல். ஒருவிதத்தில் நாட்டுப்புறத்தான் குரல். கட்டைக்குரல். அதே நேரத்தில் தனித்த குரல். அந்தக் குரலில், 'கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே' என்ற பாடலை எப்போது கேட்டாலும் அப்போது எனக்குள் ஒரு மாற்றம் நிகழும். அந்த மாற்றத்தை, அந்த சந்தோஷத்தை வார்த்தைகளினால் சொல்லிவிட முடியாது.

தி.மு.க.வைப் பற்றியும், கலைஞரைப் பற்றியும், நீதிக் கட்சி, திராவிடர் இயக்கம் பற்றியும் பாடல்களை யார் எழுதியது, எந்தச் சூழலில் எழுதப்பட்டது, பாடியது யார், எதற்காக, யாருக்காகப் பாடினார் என்பதெல்லாம் பின்னாளில்தான் நான் தெரிந்துகொண்டேன். மாபெரும் அரசியல், சமுதாய இயக்கத்திற்கு ஒரு பாடகர் தன் குரலின் வழியாகச் செய்த பங்களிப்பு, காலம் முழுவதும் நிற்பதாக மாறிவிட்டது. இது காலம் சொல்லும் வரலாறு.

**பெரியாரையும் அண்ணாவையும் கலைஞரையும் தி.மு.க.வையும் கடைநிலை மனிதன்வரை தன்னுடைய இசையின் மூலம் கொண்டுபோய் சேர்த்த பெருமை, 'இசை முரசு' என்று கலைஞரால் போற்றப்பட்ட நாகூர் ஹனிபாவுக்கு மட்டுமே உண்டு. இப்படியொரு பாடகர் இந்தியாவில் எந்தக் கட்சியிலும் இல்லை.**

1935இல் மலேசியாவில் வேலை பார்த்துவந்த தனது தந்தைக்காக 'சைபுல் இஸ்லாம்', 'தாருல் இஸ்லாம்', 'குடி அரசு' போன்ற இதழ்களை வாங்கி அனுப்புகிற வேலையைப் பார்த்தவர் ஹனிபா. முதலில் தான் படித்துவிட்டு, பிறகு தந்தைக்கு அனுப்பினார். அந்தப் படிப்பால், பத்திரிகைகளால்தான் திராவிட இயக்கப் பற்றாளரானார். 12, 13 வயதிலேயே கலைஞருடன் இணைந்து திருவாரூர் ஓடம்போக்கி நதியில் நடந்த திராவிட இயக்கக் கூட்டங்களுக்குச் சென்றவர். கடைசிவரை கலைஞரை, 'மு.க.' என்று உரிமையுடன் அழைத்தவர். 1939இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுத்தவர். 13 வயது என்பதால் காவல் துறையினர் சிறைக்கு அனுப்பவில்லை.

**எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வுக்கு அழைத்தபோது, "எனக்கு ஒரே இறைவன். ஒரே கட்சி. ஒரே தலைவன் (கலைஞர்)" என்று சொன்னவர். கடைசிவரை தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளதாவர். அதனால்தான் 'கற்பு நெறி தவறாதவர்' என்று கலைஞர் புகழ்ந்தார். அதோடு நிற்காமல், "ஆடாமல் அசையாமல், அலை பாயாமல், சபலத்திற்கு ஆட்படாமல், எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன், தொடேன் என்கிற உறுதிமிக்க இசைவாணர்" என்று எழுதினார்.**

எழுத்தாளர் **இமையம்**



1961இல் தி.மு.க.விலிருந்து ஈ.வெ.கி. சம்பத் பிரிந்தார். கண்ணதாசனும் பிரிந்தார். அப்போது ஹனிபா நாகை சலீமிடம் சொல்லி பாடலை எழுதவைத்து, பாடிய பாடல்தான். 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததடா'. இப்பாடலை 1961இல் பாடியிருந்தாலும் பின்னாளில் எம்.ஜி.ஆர். தி.மு.க.விலிருந்து பிரிந்த போதும் தி.மு.க. மேடைகளில் அதிகம் ஒலித்த பாட்டு இதுதான். தி.மு. கழகத்திற்குத் துரோகம் செய்பவர்களுக்காக ஹனிபா உருவாக்கிய பாடல். அன்று மட்டுமல்ல, எல்லாக் காலத்துக்கும் பொருந்தும் பாடல்.

1940 முதல் 2006ஆம் ஆண்டுவரை, அதாவது 65 ஆண்டுகளில் பல்லாயிரக் கணக்கான இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். எந்த இசைக் கலைஞரும் செய்யாத சாதனை, 'ஹனிபாவுக்கு ஒலிபெருக்கியே தேவையில்லை' என்று பெரியார் புகழ்ந்துள்ளார். ஹனிபா எந்த இசை நிகழ்ச்சிக்குச் சென்றாலும் ஒத்திகை பார்க்கிற பழக்கமற்றவர். எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பாடுகின்ற வல்லமை படைத்தவர். இந்தி எதிர்ப்புப் போராட்ட சமயத்தில் பாரதி தாசன் எழுதிய, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!', 'தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்', 'பாண்டியர் ஊஞ்சலில் பாடி வளர்ந்த பைந்தமிழ்' ஆகிய பாடல்களை ஹனிபா பாடினார்.

பாரதி தாசனின் பாடல் வரிகளும் ஹனிபாவின் குரலும் இந்தி எதிர்ப்புப் போராட்டக்காரர்களுக்குப் பெரும் ஆற்றலைத் தந்தது. எழுச்சியைத் தந்தது. பாரதி தாசன்மீது மிகுந்த பற்றுக்கொண்டவர். அதைவிடவும் தமிழ் மொழி மீது அதிகப் பற்றுக்கொண்டவர். அதனால்தான், 'தமிழ் எங்கள் தாய் மொழி. இஸ்லாம் எங்கள் மார்க்க வழி' என்று சொன்னார்.

**ஹனிபா பாடியதில் ஒரு பாடல்கூட காலத்தால் மங்கிப் போகவில்லை. மாறாக, புது ஆற்றல் கொண்டு ஒலித்துக் கொண்டிருக்கிறது. 'அண்ணா அழைக்கின்றார்' (1955), 'கல்லக்குடிகொண்ட கருணாநிதி வாழ்கவே' (1953) 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்ததடா' (1961), 'எத்தனை கலைஞர்கள் இருந்தாலும் தமிழ் வித்தகக் கலைஞர்' (1962), 'ஓடிவருகிறான் உதய சூரியன்' (1984), 'கம்பீரக் கலைஞர் எங்கள் கருணாநிதி (1984), 'ஆசை ஆசை கலைஞர்மீது ஆசை' போன்ற பாடல்கள் தி.மு.க.வின் கிளைக்கழக நிகழ்ச்சி முதல், ஒன்றிய, நகர மாவட்ட, மாநில மாநாடுகளில் இன்றுவரை ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. தி.மு.க. இருக்கும்வரை ஒலிக்கும். தி.மு.க. மாநாடுகளில் மட்டுமல்ல, தி.மு.க. நடத்தும் போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும்கூட ஹனிபாவின் பாடல்கள் தான் அனைவரையும் ஒன்றிணைக்கும் கருவியாக இருக்கிறது. முன்பு அல்ல, இன்றல்ல என்றும் தி.மு.க.வின் பிரச்சாரப் பீரங்கியாக இருப்பது ஹனிபா பாடிய பாடல்கள்தான். அந்த நாட்டுப்புறத்துக் குரல்தான்.**

**தி.மு.க. போன்ற ஒரு கட்சியையும், ஹனிபா போன்ற ஒரு பாடகரையும் உலகில் எங்குமே காண முடியாது. அதிசயமான கட்சி. அதிசயமான தொண்டன். 'ஆசை ஆசை கலைஞர் மீது ஆசை' என்ற பாடலில் 'உன்னை அடித்து விளையாட ஆசை' என்று பாடியிருக்கிறார். இப்படிப் பாடுவதற்கு ஹனிபாவுக்கு மட்டுமே ஆற்றல் உண்டு. தி.மு.க. நிகழ்ச்சிகளில் மட்டுமல்ல, கட்சிக்காரர்களுடைய திருமண நிகழ்ச்சிகளிலும் பிற நிகழ்ச்சிகளிலும் ஹனிபா பாடிய பாடல்கள்தான் ஒலிக்கின்றன. இது ஒரு உலக அதிசயம்.**

திராவிட இயக்கக் கொள்கைகளுக்காகப் பாடியதோடு ஹனிபா பல திரைப்படங்களிலும் பாடியிருக்கிறார். 'குலேபகாவலி' படத்திலும் 'பாவ மன்னிப்பு' படத்திலும் எல். ஜி. கிருஷ்ணனுடனும் T.M. சௌந்திரராஜனுடனும் இணைந்து பாடியிருக்கிறார். 'செம்பருத்தி' படத்தில், 'நட்ட நடு கடல் மீது நான் பாடும் பாட்டு' காலகாலத்திற்கும் ஏற்ற பாடல். காதலர்களால் கொண்டாடப்படும் பாடல். இப்பாடலை நான் சோகமாக இருக்கும்போதெல்லாம் விரும்பி ஆசையாகக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கேட்கிறேன். தமிழ் மொழியில் மட்டுமல்ல, சிங்கள மொழியிலும் இந்தி, உருது, அரபு மொழிகளிலும் பாடியிருக்கிறார். தன்னுடைய வாழ்நாளில் பல மொழிகளில் தனிப் படல்களையும், சினிமாப் பாடல்களையும், பக்திப் பாடல்களையும் பாடியவர்.

**பல்லாயிரக்கணக்கான இசைக் கச்சேரிகளை நடத்தியவர் தான் என்றாலும் ஹனிபா முறையாக இசை கற்றவர் அல்ல என்பதுதான் நாம் கவனம் கொள்ள வேண்டிய விஷயம். 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை' (1963) என்ற பாடலை இஸ்லாம் சமூகத்தினர் மட்டுமல்ல, இந்து மடாதிபதிகளும்கூட இன்றும் விரும்பிப் பாடுகின்றனர். எல்லா மக்களாலும் கொண்டாடப்படும் பாடல். இஸ்லாம் சமூகம் இருக்கும்வரை 'இறைவனிடம் கையேந்துங்கள்' பாடலும் ஹனிபாவின் குரலும் இருக்கும். அழியாத பாடல். அழியாத குரல்.**

திராவிட இயக்கக் கொள்கைகளில், சுயமரியாதைக் கொள்கைகளில் எவ்வளவு ஈடுபாடு கொண்டவர் ஹனிபா என்பதற்கு ஆயிரமாயிரம் எடுத்துக்காட்டுகளைக் காட்ட முடியும். கொள்கைக் குன்று. முஸ்லிம் என்றாலும் இளம் வயதிலேயே பெரியாரை வரவழைத்து நாகூரில் கூட்டம் போட்டவர், தான் கட்டிய வீடுகளுக்கு, 'கலைஞர் இல்லம்', 'அண்ணா இல்லம்' என்று பெயர் வைத்தவர். பெரியாரோடு முரண்பட்டு திராவிடர் கழகத்தை விட்டுப் பிரிந்தபோது, அண்ணாவுடன் வந்தவர். தன்னுடைய வீட்டுக்கு வரவழைத்து அண்ணாவால் விருந்து கொடுக்கப்பட்டவர். கலைஞர், பேராசிரியர் இருவரின் தோள்களிலும் கையைப் போட்டுக்கொண்டு போட்டோவுக்கு ஸ்டைலாக 'போஸ்' கொடுத்தவர். அதிசயமான போட்டோ அது. கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் ஹனிபாவுக்கு அளித்த கௌரவம் அது.

சிங்கப்பூர், மலேசியா என்று வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்துவிட்டு வந்த அண்ணா, ஹனிபாவை அழைத்து, "வீட்டுக்கு வீடு உன் பாட்டுதான் ஒலித்துக்கொண்டிருந்தது" என்று சொன்னார். ஹனிபா பாடிய இயக்கப் பாடல்கள் தமிழ் நாட்டில் மட்டுமல்ல உலகெங்கும் வாழ்கிற தமிழர்கள் வீடுகளில் எல்லாம் அன்று மட்டுமல்ல, இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அதே மாதிரி, 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லை என்று சொல்லுவதில்லை' என்ற பாடலும் உலகெங்குமுள்ள தமிழர்கள் இல்லங்களில் எக்காலத்திலும் ஒலிக்கும் பாடலாக இருக்கிறது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, 'தமிழ் மணக்கும் திசையெல்லாம் தேடினேன் உன்னை' (1969) என்ற பாடலை ஹனிபா பாடியவிதம் ஒரு லட்சம் முறை கேட்டாலும் சலிப்பே வராது. இப்பாடலைக் கேட்டால் அண்ணாமீது பற்றும் மதிப்பும் கூடும்.

'ஹனி' என்றால் தேன். 'பா' என்றால் பாட்டு. ஹனிபாவின் பாட்டு தேனாக இனிக்கிறது. எனவே அவருக்கு ஹனிபா என்று பெயர் வைத்தவர்களைப் பாராட்ட வேண்டும்" என்று ஹனிபாவைப் பற்றி கலைஞர் பேசியும் எழுதியும் இருக்கிறார். தமிழ்நாட்டில் ஆயிரம் பாடகர்கள் இருந்தாலும், ஹனிபாவுக்கான இடம் என்பது யாராலும் இட்டு நிரப்ப முடியாத இடம். இசை வானில் பறந்த தனித்த பறவை. எளிய கருவிகளையும், நான்கைந்து கருவிகளையும் மட்டுமே கொண்டு ஹனிபா உருவாக்கிய இசைக் கோர்வை என்பது அலாதியானது. உன்னதமானதுதனித்துவ மானது.

எழுத்தாளர், பத்திரிகையாளர், ஓவியர், பாடகர் என்று பல பரிமாணங்களைக் கொண்ட ஆபிதீன் என்பவர்தான் ஹனிபாவின் முழு வளர்ச்சிக்கும் காரணமானவர். அவரே பாடகராக இருந்தும், தனக்கு வந்த வாய்ப்புகளையெல்லாம் ஹனிபாவுக்காகத் தந்தவர். புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தந்தவர். ஹனிபாவின் திறமையைக் கண்டறிந்தவர். ஹனிபாவின் நூற்றாண்டில் ஆபிதீனை நினைவுகொள்வது அவசியம். அதிசயமான மனிதர்.

**தி.மு. கழகத்திற்கும் அழிவில்லை. ஹனிபாவின் பாடல்களுக்கும் அழிவில்லை. தலைமுறை தலைமுறையாகத் தொடரும் கொள்கை உறவு. ஹனிபாவின் நூற்றாண்டை ஒட்டி தமிழ்நாட்டின் முதலமைச்சர், சிறப்பு மலர் ஒன்றை அரசின் சார்பாக வெளியிடுகின்றார், நூற்றாண்டு விழாவையும் நடத்துகின்றார், இயக்கத்திற்காக உழைத்தவர்களைப் பாதுகாப்பதிலும் அவர்களுடைய நினைவுகளைப் போற்றுவதிலும் தீராத தாகம் கொண்டவர்தான் முதல்வர் மு.க. ஸ்டாலின். பாசமும் அக்கறையும் ஹனிபாமீது கொண்டவர். சாதாரண எளிய கட்சிக்காரனையே கொண்டாடித் தீர்க்கிறவர், ஹனிபாவின் நூற்றாண்டை எளிமையாகக் கொண்டாடுவாரா என்ன?**

கட்சிக்காக உழைத்த யாரையும் தி.மு.கழகம் மறந்ததில்லை. சம்பந்தப்பட்டவர்களுக்கு அளிக்க வேண்டிய மரியாதையை அளிக்கத் தவறியதில்லை. ஹனிபாவுக்குக் கட்சியில் பல பொறுப்புகள் வழங்கப்பட்டன. சட்டமன்ற மேலமை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். அவர் மறைந்த பிறகு நாகூர் தைக்கால் தெருவிற்கு ஹனிபா பெயர் சூட்டப்பட்டுள்ளது. சில்லடி கடற்கரை சாலைக்கும் சிறுவர் பூங்காவிற்கும் ஹனிபாவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**தி.மு.க. என்கிற சமுதாய இயக்கம் இருக்கும்வரை நாகூர் ஹனிபா இருப்பார். தி.மு.க.வின் மேடைகளில் முதல் குரலாக அவருடைய குரலே ஒலிக்கும். தி.மு.க. மேடைகளை எக்காலத்திலும் அலங்கரிக்கும் ஹனிபாவின் குரல். அவருடைய பாடல் இல்லாமல் தி.மு.க. மேடை இருக்காது.**